1987 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதில் இருக்கின்ற நியாயம் எனக்குப் புரிகிறது. நெடுந்தூரம் போகின்ற போது லாரிச் சத்தத்தை ஆலைச் சொந்தக்காரர்கள் தருவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஆலை நிர்வாகிகளிடத்தில் இதைப் பற்றிப் பேசிப் பார்க்கலாம்.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பின் ரெக்கவரியைப் பொறுத்துத்தான் இந்திய அளவில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அப்படிப் பார்க்கின்றபோது உத்தரப்பிரதேச மாநிலத்தில் கரும்பின் உற்பத்திச் செலவு குறைவாக இருந்தாலும் ரெக்கவரி அதிகமாக இருக்கிறது. ஆனால் தமிழகத்தினைப் பொறுத்தவரையில் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது; ரெக்கவரி குறைவாக இருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற விலை கட்டுப்படியாகவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ட்ரான்ஸ்போர்ட் செலவை மானியமாக அளிக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படுகிற கரும்புக்கு ரெக்கவரிச் சத்து அதிகம் இல்லை. மகாராஷ்டிரம் மற்றும் சில மாநிலங்களில்தான் அது அதிகமாக இருக்கிறது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் ரொம்பக் குறைவுதான். ஆகவே அதோடு தொடர்புபடுத்தினால் நாம் கொடுப்பது ரொம்ப, ரொம்ப அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குருவிகுளம் ஒன்றியம் இளையரசனேந்தல் உயர்நிலைப் பள்ளியை உயர்த்துதல்.

291—(*வினா எண். 9014) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இளையரசனேந்தல் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கிட உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும்?

[1987 ஏப்ரல் 4

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

நீதிமன்றங்களில் சொத்து ஜாமீனுக்குப் பதில் நபர் ஜாமீன் முறையை அமலாக்குதல்.

292—(*வினா எண். 9118) **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீதிமன்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களை ஜாமீனில் எடுக்கிறபோது சொத்து ஜாமீன் கோரப்படுவதற்குப் பதிலாக நபர் ஜாமீன் முறையை அமலாக்குகின்ற முறையில் சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனை நினை என்று கற்றுத் தந்த தந்தை பெரியார் அவர்களின் வழித்தோன்றல் ஆட்சியில் இருக்கிற இந்த நேரத்தில் மனிதர்களை மதிக்காமல் சொத்துக்களை மதிக்கிற நடைமுறையை மாற்றுகிற வகையில், சொத்து ஜாமீன் பெறுவதற்குப் பதிலாக நபர் ஜாமீனே போதும் என்ற நடைமுறையைக் கொண்டு வர அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 73-வது திருத்தப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டத்தினுடைய 436 (1), 437 (1), 440 (1), 441 (1) என்ற பிரிவுகளின்படி சொத்து ஜாமீன் என்பது நீதி பரிபாலனத்தினுடைய நன்மை கருதி இருக்கவேண்டும் என்று முடிவு செய்து அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை நீக்குவோமானால் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு நிலுவைகள் அதிகமாகும் என்ற உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தை ஒட்டி 1973-ல் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அது தொடர்ந்து இருந்து வருகிறது.